දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )

මගේ අංකය )
எனது இல )
My No. ) NTA/06/T/14//2017

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )
Date ) 2017.08. 21

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

**பொது சுற்றறிக்கை கடித இலக்கம் : 02- 160/2017**

பிரதிப்பணிப்பாளர் நாயகம் (இலங்கை தேசிய வைத்தியசாலை),
சகல போதனா வைத்தியசாலை/பொது வைத்தியசாலை பணிப்பாளர்கள்,
சகல ஆதார வைத்தியசாலைகள்/விஷேட நிறுவன பணிப்பாளர்கள்,
அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து நிறுவனத்தலைவர்களுக்கும்,

**மஹரகம பல் மருத்துவ நிறுவனத்திற்கு தாதி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் கோரல்.**

சுகாதார அமைச்சின் நேரடி நிருவாகத்திற்கு உட்பட்ட சகல வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் கடமை புரிகின்ற, மஹரகம பல் மருத்துவ நிறுவனத்திற்கு இடமாற்றம் பெற உத்தேசிக்கும் தாதி உத்தியோகத்தர்களிடம் இருந்து 2017 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. இடமாற்றம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள, பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இணைப்பு 01 மூலம் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் இடமாற்றத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

I. 2017.06.30 ஆம் திகதிக்கு ஒரு சேவை நிலையத்தில் நான்கு (04) வருடங்கள் தொடர்ச்சியான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தரம் III, தரம் II, தரம் I, மற்றும் அதிதரத்திற்கு பதவியுயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள்

II. மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலை, தேசிய உளநல வைத்தியசாலை, வெலிசரை மார்பு வைத்தியசாலை மற்றும் ஆதார வைத்தியசாலை (IDH) இல் கடமையாற்றுகின்ற 2017.06.30 ஆம் திகதிக்கு இரண்டு வருட காலத்தைப்பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள்

III. குறிப்பிட்ட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யாதிருப்பினும், அங்கவீனமான பிள்ளைகள், நீண்டகால நோயினால் ஓரிடமாகவுள்ள வாழ்க்கைத்துணைவர் மற்றும் மருத்துவ காரணங்கள் போன்ற சாதாரண காரணங்களுக்காக இடமாற்றத்தை எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்கள் (மருத்துவ காரணங்களுக்காக இடமாற்றம் கோருகின்ற உத்தியோகத்தர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மருத்துவ அறிக்கை இடமாற்ற விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

03. எவ்வாறாயினும், இதற்கு முன்னைய வருடங்களில் இடமாற்றத்தின் கீழ் உத்யோகத்தர் ஒருவருக்கு மஹரகம பல் மருத்துவ நிறுவனத்திற்கு இடமாற்றம் கிடைத்திருப்பின் அந்த இடமாற்ற கட்டளை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், அவர்களும் மீண்டும் விண்ணப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும் இதற்கு முன்னர் மஹரகம பல் மருத்துவ நிலையத்திற்கு வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து, வெற்றிடங்கள் இல்லாத காரணத்தால் வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு மீண்டும் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன், அவ் உத்தியோகத்தர்கள் முன்னைய வருடத்தில் சமர்ப்பித்த விண்ணப்ப படிவத்தின் பிரதியொன்றையும் அதனுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவர்களின் சேவைக்காலம் கருதப்படுவது முன்னைய சேவை நிலையத்தின் சேவைக்காலத்தையும் கருத்திற் கொண்டு இடமாற்றம் வழங்கப்படும்.

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385. Rev. Baddegama Wimalawansa Thero Mawatha. Colombo 10. Sri Lanka.

**03. விண்ணப்பிக்கும் முறை:**

I. இடமாற்றம் கோரும் போது இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப் படும் விண்ணப்பங்கள் மாத்திரமே கருத்திற்கொள்ளப்படும். மேலும் இதற்கு முன்னர் இடமாற்றம் பெறுவதற்காக விண்ணப்பித்து, இடமாற்றக்கட்டளை கிடைக்காத உத்தியோகத்தர்கள் இருப்பின், அவர்களும் இச்சுற்றறிக்கைக்கு அமைய புதிதாக விண்ணப்பித்தல் வேண்டும். மேலும், தற்போது மஹரகம பல் மருத்துவ நிலையம் அல்லது வேறு வைத்தியசாலைகளுக்கு இடமாற்றக் கட்டளை பெற்றிருந்த போதிலும், இடமாற்றக் கட்டளையின் பிரகாரம் புதிய சேவை நிலையங்களுக்கு விடுவிக்கப்படாத உத்தியோகத்தர்களில் யாருக்காவது மஹரகம பல் மருத்துவ நிறுவனத்திற்கு இடமாற்றம் பெறுவதற்கான அவசியம் இருப்பின் அவர்களுக்கும் இதற்கு அமைய விண்ணப்பிக்க முடியும்.

II. ஒவ்வொரு உத்தியோகத்தர் தொடர்பாக சரியான மற்றும் பூரணமான தகவல்களை வழங்குவது ஒவ்வொரு நிறுவன தலைவரினதும் பொறுப்பாகும். அவ்வாறே இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் நிறுவனத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் (பிரசவ விடுமுறை, விஷேட விடுமுறையில் இருக்கும் உத்தியோகத்தர்கள் உட்பட) அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொய்யான தகவல்களை வழங்குதல் மூலம் தகுதியான உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமையால் ஏற்படக்கூடிய சிரமங்கள் தொடர்பாக இவ் அமைச்சு பொறுப்பேற்காது என்பதுடன், அது தொடர்பாக அந்தந்த தாபன தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்பதை அவதானத்திற்கு உட்படுத்துகின்றேன்.

III. எல்லா இடமாற்ற விண்ணப்பங்களும் நிறுவன பணிப்பாளரின் பரிந்துரையுடன் ஆவணப்படுத்தப்பட்டு தபாலில் அல்லது அமைச்சிற்கு நேரடியாக கொண்டுவந்து சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எவ்வித காரணங்களுக்காகவும் உத்தியோகத்தர்களினால் தனிப்பட்ட ரீதியில் கொண்டு வந்து தரப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இவ் அறிவித்தலுக்கு மாறான சகல விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி 2017.09.11 ஆம் திகதி என்பதுடன், இதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை :**

i. இந்த சுற்றறிக்கை மூலம் மஹரகம பல் மருத்துவ நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பதவியணியினரில் தற்போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக மாத்திரம் இடமாற்றம் வழங்கப்படுவதுடன், விண்ணப்பிக்கும் சகலருக்கும் இடமாற்றம் வழங்கப்படுவதாக இங்கு எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

ii. கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் இடமாற்ற சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு இடமாற்றம் வழங்கப்படுவதுடன், இதன் போது உரிய உத்தியோகத்தர்களின் முதல் நியமனத்திகதி கருத்திற் கொண்டு சிரேஷ்ட நிலையின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்படும். அதன்போது, ஒரே தினத்தில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் இருப்பின் அவர்கள் மாணவ தாதி பயிற்சியின் இறுதிப்பரீட்சையில் நாடளாவிய ரீதியில் வெளிக்காட்டிய திறமையை கருத்திற்கொண்டு சேவை மூப்பு பட்டியல் தயாரிக்கப்படும்.

iii. சிகிச்சை சேவைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு மனித வள முகாமைத்துவம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், வெற்றிடங்கள் நிலவுகின்ற சேவை அவசியத்திற்கேற்ப தாதி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் கருத்திற் கொள்ளப்படுவதுடன்,பதில் உத்தியோகத்தர்கள் இன்றி வைத்தியசாலைகளின் வேலைகளில் பாதிப்புகள் ஏற்படும் வண்ணம் விடுவிக்கப்பட மாட்டார்கள் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

04. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது நிறுவனத்தின் சகல தாதி உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவும். இங்கு குறிப்பிடப்படாத இடமாற்றம் தொடர்பான வேறு விடயங்கள் தொடர்பாக தாபன விதிக் கோவை மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கமைய இறுதித்தீர்மானம் என்னால் எடுக்கப்படும் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

Sgd. ஜனக்க சுகததாஸ
செயலாளர்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு